STC.No. 2060/2024 நாள் : 05.03.2026

PW1- திரு.வேணுகோபால்

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1) புகார்தார் நிறுவனத்தில் எந்த ஆண்டில் இருந்து நான் பணியாற்று கின்றேன் என்றால் 2003 ஆம் ஆண்டில் இருந்து பணியாற்றுகின்றேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.com. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் மேலாளர். எங்கள் நிறுவனத்தில் எங்கள் நிறுவனத்தில் வேறு மேலாளர் பதவி உள்ளதா என்றால் இல்லை நான் மட்டும் தான். வரவு செலவு கணக்கு எழுதுவதற்கு தனியாக யாரும் அதிகாரி உள்ளார்களா என்றால் இல்லை நானே தான் எழுதுகிறேன். வரவு செலவு புத்தகங்களை நாங்கள் கணிணியில் மட்டும பராமரிக்றேனா அல்லது பதிவேடுகளாக பராமரிக்குறோமா என்றால் இரண்டுமே.

2) கணினியில் பராமரிப்பதற்கு தனிப்பட்ட சாப்ட்வேர் போட்டுள்ளோமா என்றால் போட்டுள்ளோம். நாங்கள் என்ன சாப்ட்வேர் பயன்படுத்துகிறோம் என்றால் டேலி சாப்ட்வேர். புகாரில் எதிரியோட எந்த வருடம் முதல் வியாபாரம் நடந்து கொண்டிருந்தை பற்றி குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் 01.04.2023 ஆம் ஆண்டில் இருந்து. 01.04.2023 ஆம் ஆண்டில் இருந்து துனிகள் பர்சேஸ் ஆர்டரை மற்றும் இன்வென்டரி ஆகியவற்றை தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். இன்வென்டரி வரும் போது துனிகள் எந்த நிட்டிங் கம்பெனியில் இருந்து வருகிறதோ அந்த கம்பெனியின் வாகன எண் மற்றும் அதில் எத்தனை கிலே துனி உள்ளது என்ற பதிவு இருக்கும்என்றால் சரிதான்,. துனி உள்ளே வந்து நாங்கள் வாடிக்கையாளருக்கு எங்கள் பணிகளை முடித்து பில் செய்யும் போது பர்சேஸ் ஆர்டர் மற்றும் இன்வென்டரி ஆகியவற்றின் குறிப்புகளை இனைத்து எங்கள் இன்வாய்ஸடுன் அனுப்புவோம் என்றால் சரிதான்.

3) இன்வாய்ஸ்கள், பர்சேஸ் ஆர்டர் மற்றும் இன்வென்டரியுடன் அனுப்புவதற்கான அடிக்கட்டைகள் எங்களிடம் இருக்கும் என்றால் சரிதான். எதிர் நிறுவனத்துடன் நடந்த பர்சேஸ் ஆர்டர் மற்றும் இன்வாய்ஸ் மற்றும் இன்வென்டரி ஆகியவற்றை நாங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாக்கல் செய்ததற்கா னகுறிப்பிட்ட காரணம் எதுவும் உண்டாஎன்றால் இல்லை. நாங்கள் முதல் ரசீதையே 01.04.2023 ஆம் தேதிக்கு பிறகு தான் எதிரி நிறுவனத்திற்கு போட்டுள்ளோம் என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்துள்ள 01.04.2023 க்கு முன் Opening Balance 12,66,274/- என குறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) நாங்கள் முதல் இன்வாய்ஸ் போடுவதற்கு முன்பே எங்கள் லெட்ஜரில் 12,66,274 என்ற குறிப்புள்ளது என்பதில் இருந்தே இந்த லெட்ஜர் தவறானது என்றால் 01.04.2023 வரை பணம் வந்துள்ளது பின்னிட்டு தான் பணம் வரவில்லை. லெட்ஜர் அக்கவுண்ட் எந்த கணினியில் பராமரிக்கப்பட்டது யாரால் பிரின்ட் செய்யப்பட்டது இதுபோன்ற எந்த விவரங்கள் இல்லாமல் மேற்படி ஆவணத்திற்கான சாட்சிய சட்ட ஆவணங்கள் இனைக்காமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த ஆவணம் சட்டத்தின்பால் ஏற்கதக்கதது அல்ல என்றால் சரியல்ல. வழக்கில் எதிரிக்கு எங்கள் நிறுவனத்தில் இருந்து வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கான விவரத்தை யார் எங்கள் வழக்கறிஞர் சொன்னோம் என்றால் நானும் என் முதலாளியும் சொன்னோம்.

5) நாங்கள் எத்தனை நாள் கிரெடிட் லிமிட் எங்கள் வாடிக்கையாருக்கு கொடுப்பது வழக்கம் என்றால் 60 90 நாட்கள். 90 நாட்களுக்கு மேல் பணம் வரவில்லை என்றால் மீண்டும் அவர்களிடம் வியாபாரம் செய்வோம் என்றால் செய்வோம். இத்தனை நாட்கள் கிரிடிட் லிமிட் கொடுப்பபோம் என்று எழுத்து பூர்வமான ஆவணங்கள் எதுவும் பதிவு செய்வோம் என்றால் இல்லை. வாடிக்கையாளருக்குள்ள நிலுவை தொகைக்கு வட்டி

சேர்த்து வசூல் செய்யும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. புகாரில் இதற்கு முன்பே எதிரி 25,00000/த்திற்கு இரண்டு காசோலை கொடுத்துள்ளார் அதை வசூலுக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் ஆம். வசூலுக்கு தாக்கல் செய்து காசோலை திரும்பி யது சம்மந்தமாக நாங்கள் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினோமா என்றால் இல்லை நேரடியாக தகவல் மட்டும் சொன்னோம். கடனுக்கு வியாபாரம் செய்யும்போது அதற்கு உறுதியாவணம் எதுவும் வாங்குவோமா என்றால் இல்லை. ஒரு வாடிக்கையாளருக்கு எவ்வளவு தொகைகள் கிரெடிட் லிமிட் கொடுப்போம் என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. இரண்டு காசோலை திருப்பட்டது தற்போது என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான்.

6)அந்த இரண்டு காசோலைகளும் திருப்படுவதற்கு முன்பே இந்த வழக்கு காசோலை மற்றும் மற்றொரு வழக்கு காசோலையும் எங்களிடம் தான் இருந்தது என்றால் சரிதான். எதிரி என்ன தொழில் செய்கிறார் என்றால் லோக்கல் மற்றும் எக்ஸ்போர்ட் கார்மென்ட்ஸ் செய்து வருகிறார். ஒருவருக்கு கிரெடி்ட் லிமிட் கொடுக்க வேண்டும என்றால் அந்த நிறுவனத்தின் ட்ரன் ஓவர் எவ்வளவு என்றுகேட்டு தெரிந்து கொள்வோம் என்றால் சரிதான். எதிரி நிறுவனம் எவ்வளவு ட்ர்ன் ஓவர் செய்தார்கள் என்பது பற்றி கேட்டு தெரிந்துக்கொண்டோமா என்றால் தெரியாது. என்னால் எதிரியுடன் நடைபெற்ற இன்வாய்ஸ் பர்சேஸ் ஆர்டர் மற்றும் இன்வெண்டரி லிஸ்ட் கொடுக்க முடியுமா என்றால் கொடுக்க முடியும்.

7)எதிரி நிறுவனத்திற்கு துனை நிறுவனம் எதவாது இருப்பது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. எங்களுக்கு துனை நிறுவனம் உள்ளதா என்றால் இல்லை. எங்களுடைய வருமான வரி கணக்கில் எதிரி நிறுவனத்தின் வரவேண்டிய இன்வெண்டரி கணக்கில் காண்பித்துள்ளோமா என்றால் காண்பித்துள்ளோம். அந்த மாதிரியான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தேவைப்பட்டால்

தாக்கல் செய்வோம். எதிரி சம்மந்தப்பட்ட ஆவணங்களை எதையும் முழுமையாக தாக்கல் செய்யாமல் நீதிமன்றத்தில் பொய்யான குற்றச்சாட்டுகளை எதிரி சாட்டப்பட்டுள்ளதால் இவ்வழக்கு முதல் நிலையிலையே தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2026.03.05 17:03:36 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.